திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுங்காலம் இந்த மொழிப் போராட்டத்தில், வரலாற்றில் இடம் பெறத்தக்க அளவுக்கு, 8 பேர் தீக்குளித் தார்கள். அந்தத் தியாகிகளுடைய குடும்பங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே உதவி செய்திருக் கிறது. அரசாங்கம் அந்தக் குடும்பங்களுக்குச் சிறப்பாக உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை எல்லாம் பொதுப் பிரச்சினை யாகக் கருதப்பட மாட்டாது. தனித் தனியாக அதனுடைய தகுதிக்கேற்ப, நிலைமைக்கேற்ப, சூழலுக்கேற்ப நம்முடைய நிதி வசதிக்கேற்ப பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்று முதல் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை எய்திய பலருக்கும் இன்றைக்கு பென்சன் வழங்கப்படுகிறது. ஆனால் அதே காலத்தில் சிறை எய்தி, துன்பம் அனுபவித்த பலர் விண்ணப்பித்தும் கூட, நீண்ட காலமாக அந்த விண்ணப் பங்கள் ஏற்கப்பட்டு பென்சன் வழங்கப்படவில்லை என்று பல பேர் குறை சொல்கிறார்கள். எனவே, அப்படி பென்சன் வழங்கப்படாமல் இருக்கின்ற விண்ணப்பங்கள் உடனடியாக ஏற்கப்பட்டு, பென்சன் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அதற்கான நேரடியான விவரம் என்னிடத்தில் இல்லையென்று சொன்னாலும் கூட, ஏறக் குறைய 6 திங்களுக்கு முன்னாலே அவர்களில் பெரும்பா லோருக்கு வழங்கப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கூட ஓராண்டுக்கு முன்னர் தான் கேள்விப்பட் டதைத்தான் கேள்வியாக எழுப்பியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

கடலூரிலுள்ள மாவட்ட சிறை

*வினா 8990 திரு. கே. ரமணி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடலூரில் உள்ள மாவட்ட சிறையை ''பனிஷ்மெண்ட் சிறை'' என்று அரசு தீர்மானித்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அந்தச் சிறைக்கு அனுப்பப்படும் கைதிகள் எப்படிப்பட்ட குற்றங்களுக்காக அனுப்பப்படுகிறார்கள் ?

(இ) எவ்வளவு காலம் அங்கு வைக்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிறையில் குற்றங்கள் செய்யும் சிறைவாசிகள்; தண்டிக்கப்பட்டும், திருந்தாமல் குற்றங்கள் செய்து வருபவர்கள் ; சிறையில் ஒழுங்கு முறையில்லாதவர்கள் மற்றும் சிறையில் மற்ற சிறைவாசிகளை சிறைக்குற்றம் செய்ய தூண்டுபவர்கள் ஆகியோர் இந்த சிறைக்கு அனுப்பப்படுகின்றனர்.

(இ) மூன்று வருடங்கள்.

10 35 மணி

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றம் செய்தவர்களை, சிறைக்குள்ளேயே வேறு விதமான ஒரு சிறைக்கு மாற்றம் செய்து, அதன் மூலம் அவர்களைத் திருத்துவதற்கு என்று தான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். கடலூர் சிறை என்பது சிறைகளுக்குள்ளேயே விதி முறைகளை மீறி தவறு செய்பவர்களை அனுப்பி வைக்கும் இடமென்று சொன்னால், அங்கே போய்ச் சேர்ந்த பிறகு ஒழுங்கான முறையிலே நடந்து கொள்ளக் கூடியவர்களுடைய பட்டியல் வைக்கப்பட்டு, அவர்கள் அந்தச் சிறையிலே நன்னடத்தையோடு இருக்கிறார்கள் என்றால், அவர்கள் பழைய சிறைக்கு மாற்றப்படுவார்களா ? இந்தக் கேள்வி கேட்க என்ன காரணம் என்றால், அவர்களுடைய சொந்தக்காரர்கள், பந்துக்கள் போன்றவர்கள் நீண்ட தூரப் பயணம் செய்து, அவர்களைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட முறை ஏதாவது அரசு கையாள்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவரவர்களே, சிறைக் குற்றங்கள் செய்யும் சிறைவாசிகளை தனித்து வைத்து, அவர்கள் தொடர்ந்து 3 வருடங்கள் சிறைக் குற்றங்கள் ஏதும் செய்யாமல் இருந்தால், மறுபடியும் தாய்ச் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். 3 ஆண்டுகள் கடலூர் சிறையில் குற்றங்கள் செய்யாமல் இருந்தால், மறுபடியும் தாய்ச் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். சில வேளைகளில் கோரிக்கைகள் வரும் போது, அதைப் பரிசீலித்துப் பார்த்து, குற்றங்களின் தன்மைகளை அனுசரித்து, கோருகிற சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

[1990 ஆகஸ்ட் 20

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் திருந்துவது என்பதற்கு 3 ஆண்டுகள் என்ற லிமிட் ஏன் என்று புரியவில்லை. சில நேரங்களில் கோப தாபத்தால் திடீரென்று கைதிகளுக்கு இடையிலே ஏற்படும் சில தகராறுகளின் காரணமாக சில கைதிகள் தவறு இழைக்கிறார்கள். சில பேர் பலாத்காரமாகக் கூட காரியங்களைச் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கடலூர் சிறைக்கு மாற்றப்பட்ட பிறகு, அவர்களே வருந்தி இந்த நிலை சரியில்லை, இப்படி இருக்கக் கூடாது என்ற நிலைக்கு வரும்போது, 3 ஆண்டுகள் என்ற லிமிட் குறைக்கப்பட்டு, மறுபடியும் அவர்களைப் பற்றி தகுந்த பரிசீலனை செய்ய சிறையில் ஏற்பாடு செய்யப்பட்டு, 3 ஆண்டுகள் அங்கே இருக்க வேண்டுமென்ற நிலை இல்லாமல், அதற்கு முன்னதாகவே கூட அப்படித் திருந்தியவர்களை மாற்ற அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1985 ஆம் ஆண்டு உத்தரவின்படி இது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போல சிறைவாசிகள் குற்றங்கள் புரிந்து, பிறகு அவர்களே நல்ல முறையில் நடப்பதாக மீண்டும் உறுதிமொழி கொடுத்தால் அதை அரசு கவனித்து, குறைந்த காலத்தில் அவர்களை மாற்ற வழி வகை செய்யும்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடலூரில் உள்ள மாவட்டச் சிறையை மேலும் விரிவாக்கவும், பழுதான கட்டிடங்களைப் புதுப்பிக்கவும் ஏதேனும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பில்லை. தனியாக கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி போட்ட உள் துறையைச் சேர்ந்த சிறைத் துறையினுடைய உத்தரவு இது. உத்தரவு எண். 1741. சிறையே ஒரு பனிஷ்மெண்ட்தான். அதற்கு மேல் பனிஷ்மெண்ட் என்று சொல்லி, அந்தச் சிறைக்கே ஒரு அவப் பெயர் ஏற்படும் நிலை இருக்கிறது. அரசியல்வாதிகள் கூட அங்கே செல்கிறோம். அங்கே ஆயுள் தண்டனைக்காரர்களை வைத்து, தொலை தூரத்திலிருந்து அவர்களுடைய உறவினர்கள் கூட வந்து பார்க்க முடியாத அளவுக்கு, அந்தச் சிறை இருக்கிறது. எனவே 1985-ல் போடப்பட்ட 1741 எண். உத்தரவை மாற்றி, அவர்களை நல்ல முறையில் நடத்துவதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற கருத்து பரிசீலிக்கப்படும்.

சார் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

*வினா 8313 திரு. வெ. கோவிந்தன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

10-40 மணி

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு தேர்வு நிலைப் பேரூராட்சியைச் சுற்றி 25 கிராமங்கள் உள்ளன. அங்குள்ள மக்கள் பத்திரப் பதிவு செய்ய வேண்டுமானால் 16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குடியாத்தத்திற்குத் தான் செல்ல வேண்டியுள்ளது. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையைப் போக்க பேரணாம்பட்டில் இந்த ஆண்டு சார் பதிவாளர் அலுவலகம் திறக்க அரசு உத்தரவு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியைச் சார்ந்த நண்பருக்கு, மாண்புமிகு உறுப்பினருக்கு அந்தப் பேரணாம்பட்டு கிராமம் பற்றி ஒரு சில குறிப்பினை வழங்க விரும்புகிறேன். பேரணாம்பட்டு கிராமம் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் குடியாத்தம் தாலுக்காவைச் சார்ந்தது. இவ்வூரில் சுமார் 15 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இவ்வூருக்குச் செல்ல போதுமான போக்குவரத்து வசதிகள் உள்ளன. இவ்வூரைச் சுற்றி வருவாய்க் கிராமங்கள் அருகருகே கூடுதல் எண்ணிக்கையில் உள்ளன. மேலும் இவ்வூரில் காவல் நிலையம், தபால் நிலையம்,